## 4. கவன ஈர்ப்பு.

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலும் திண்டிவனம் நகரத்திலும் குடிநீர்ப் பஞ்சம் காரணமாக பொது மக்கள் படும் நிலை குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், டி. பொன்முடி, அ. இராசேந்திரன், எஸ்.டி. உகம்சந்த் மற்றும் மு. சின்னக்குழந்தை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் மற்றும் திண்டிவனம் பகுதிகளில் வறட்சியின் காரணமாகக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்** : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

வறட்சியால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு பகுதியையோ அல்லது வட்டத்தையோ அல்லது மாவட்டத்தையோ ''வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி'' என்று அறிவிப்பு எதுவும் செய்யாமலேயே ஆங்காங்கு அனைத்து வறட்சி நிவாரணப் பணிகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டன. 1989-ம் வருடம் மைய அரசு ரூ.3805.75 இலட்சங்கள் வறட்சி நிவாரணத்திற்கு அனுமதி அளித்தது. எனினும் மாநில அரசு ரூ. 4,558.03 இலட்சங்கள் நிவாரணப் பணிகளுக்காக செலவு செய்தது. விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

2. இதன் அடிப்படையில் கடந்த ஆண்டு 1989 ஆம் ஆண்டு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் (பிரிவினைக்கு முன் வடஆற்காடு மாவட்டம்) குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்கும் நோக்குடன், கீழ்க்கண்டவாறு மொத்தம் ரூ. 99.46 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டு குடிதண்ணீர் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது.

1990 ஏப்ரல் 20] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | புதிய திறந்தவெளிக் கிணறுகள் அமைக்க .. | 8.50 |
| 2. | உறைக்கிணறுகள் அமைக்க .. | 0.25 |
| 3. | திறந்தவெளிக் கிணறுகள் ஆழப்படுத்த .. | 25.55 |
| 4. | லாரிகள் மூலம் குடிநீர் வழங்கிட .. .. | 6.01 |
| 5. | ஆழ்துளைக் கிணறுகள் அசுத்தம் நீக்கி பழுது பார்க்க. .. | 8.35 |
| 6. | தனி மின்வழித் தடம் அமைக்க .. .. | 13.00 |
| 7. | ஜெனரேட்டர்கள் வாங்க .. .. | 33.31 |
| 8. | வடிமுனைக் குழாய்கள் அமைக்க .. .. | 4.15 |
| 9. | இதரப் பணிகள் .. | 0.34 |
| | மொத்தம் .. | 99.46 |

மேலும் இது தவிர திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் (பிரிவினைக்கு முன் வட ஆற்காடு மாவட்டம்) 620 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும் ஆணை வெளியிடப்பட்டது. வறட்சியின் போது பாதிக்கப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு இம் மாவட்டத்திற்கு ரூ. 42.50 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. இவ்வாறாகக் கடந்த 1989 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

3. தற்போது சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அனைத்து மாவட்டாட்சியர்களையும் கலந்து ஆலோசித்து மாவட்டத்திலுள்ள குடிதண்ணீர் நிலைமையைப் பற்றிய கருத்துரு ஒன்று அரசுக்கு அனுப்பக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அன்னாரின் அறிக்கை அரசுக்குக் கிடைக்கப்பெற்றதும், நிலைமைக்கேற்றவாறு அனைத்து மாவட்டங்களிலும் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

DROUGHT 1989—STATEMENT SHOWING THE CEILING OF EXPENDITURE APPROVED BY GOVERNMENT OF INDIA AND THE AMOUNT SPENT BY STATE GOVERNMENT.

| *Serial number and name of the Scheme.* | *Approved ceiling by Government of India.* | *Expenditure upto 31st October 1989 by State Government.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| A. NON-PLAN— | | |
| 1 Transportation of water *through lorries:* | | |
| Urban .. .. .. .. | 180.00 | 182.76 |
| Rural .. .. .. .. | 45.00 | 97.97 |
| 2 Flushing and repairing *of Bore Wells :* | | |
| Urban .. .. .. .. | 15.00 | 33.13 |
| Rural .. .. .. .. | 30.00 | 50.79 |
| 3 *Deepening of Open Wells :* | | |
| Urban .. .. .. .. | 10.00 | 60.78 |
| Rural .. .. .. .. | 90.00 | 191.71 |
| 4. Transportation of water for Madras, Madurai, Kodaikanal and *Pudukkottai.* | 186.25 | 384.32 |
| **Total** .. | 556.25 | 1001.46 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 20] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| I. B. PLAN— | | |
| 1 *Bore wells* : | | |
| Urban .. .. .. .. | 375.00 | 334.17 |
| Rural .. .. .. .. | 1,165.00 | 1,247.70 |
| 2 *Construction of open wells* : | | |
| Urban .. .. .. .. | 5.00 | 17.25 |
| Rural .. .. .. .. | 66.26 | 80.81 |
| 3 *Ring wells* : | | |
| Urban .. .. .. .. | 9.70 | 7.40 |
| Rural .. .. .. .. | 32.50 | 34.41 |
| 4 *Improvement of power pumps* : | | |
| Urban .. .. .. .. | 16.40 | 19.54 |
| Rural .. .. .. .. | 34.60 | 48.70 |
| 5 *Feeder lines* : | | |
| Urban .. .. .. .. | 66.47 | 65.67 |
| 6 *Cattle tubs* : | | |
| Rural .. .. .. .. | 12.79 | 12.79 |
| 7. *Filter Point into India II Hand Pumps and conversation of Filter point* : | | |
| Urban .. .. .. .. | 3.75 | 3.75 |
| Rural .. .. .. .. | 13.00 | 18.00 |

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1990 ஏப்ரல் 20

| | | |
|---|---|---|
| 8. *Improvement of drinking water supply schemes :* | | |
| Urban .. .. .. .. | 43.70 | 69.77 |
| Rural .. .. .. .. | 95.75 | 109.79 |
| 9 *Supply of water to Schools, Hospitals Hostels, etc.:* | | |
| Urban .. .. .. .. | .. | .. |
| Rural .. .. .. .. | 10.00 | 10.00 |
| 10 *Comprehensive Water Supply Scheme;* | | |
| Urban .. .. .. .. | 72.87 | 67.85 |
| Rural .. .. .. .. | 152.21 | 164.25 |
| 11 Madras City .. .. .. .. | 175.00 | 175.27 |
| 12 Madurai City .. .. .. .. | 60.00 | 59.95 |
| 13 Coimbatore City .. .. .. | 15.00 | 15.00 |
| 14 Kodaikanal Township .. .. .. | 2.50 | 5.00 |
| Total .. | 2,426.90 | 2,567.07 |
| II. Labour oriented scheme .. .. | 300.00 | 498.50 |
| III. Agricultural input subsidy .. .. | 450.00 | 450.00 |
| IV. Supplementary nutrition .. .. | 36·00 | 36·00 |
| V. Public Health .. .. .. .. | 10.00 | 10.00 |
| VI. Fodder supply .. .. .. | 25.00 | 25.00 |
| Total .. | 3,248.50 | 3,586.57 |
| Grand total (A+B) .. | 3,804.75 | 4,588.03 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 20]

10–05 மணி

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் ஏற்கெனவே வட ஆற்காடு மாவட்டம் ஒன்றாக இருந்தபோது செய்த பணிகளைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அறிக்கை கேட்கப்பட்டுள்ள தாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய தினம் திருவண்ணாமலை. சம்புவராயர் மாவட்டத்திலுள்ள 18 ஒன்றியங்களிலும் கடுமையான தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியிலுள்ள சேத்துப்பட்டு, ஜவ்வாது மலை, துரிஞ்சாபுரம் கலசப்பாக்கம் ஒன்றியங்களிலுள்ள 105 ஊராட்சிகளிலும் கடுமையான குடிதண்ணீர் பஞ்சம் இருக்கிறது. இறைவைப் பாசனத்தாலே பயிரிட முடியாத சூழ்நிலையிலே விவசாயக் கூலிகள் வேலையை இழந்திருக்கிறார்கள். அதைப் போக்குகின்ற வகையில் நம்முடைய அரசு போர்க்கால நடவடிக்கை போன்று உடனடியாக அறிக்கையைப் பெற்று, நிதி ஒதுக்கி, விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்தி தக்காவிக் கடனும் வழங்கி, விவசாயிகள் கூலியைப் பெறுவதற்கும், வேலைவாய்ப்பிற்கும் குடிதண்ணீர் பஞ்சத்தை போக்கவும், ஆழ்துளைக் கிணறுகளை அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வறட்சியைப் போக்கவும், குடிதண்ணீர் வசதிகளைப் பெருக்கவும், எந்தெந்த வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிய குறிப்பு இங்கே தரப்பட்டிருக்கிறது. இது தவிர, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் பிரிவினைக்கு முன்பு எத்தனை ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன என்ற செய்தியும் தரப்பட்டிருக்கிறது. இப்போது சம்புவராயர் மாவட்டத்தில் இருக்கின்ற வறட்சியைக் கணக்கில் எடுத்து குடிதண்ணீர் நிலைமையைப் பற்றி கருத்துரு ஒன்றை அரசுக்கு அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் அறிக்கை அரசுக்கு கிடைக்கப்பெற்றதும், நிலைமைக்கேற்றவாறு அனைத்து மாவட்டங்களிலும் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும். சம்புவராயர் மாவட்டத்திற்கு தனிச் சலுகை தரப்படும்.

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய அறிக்கைகள் இங்கே அளிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலுள்ள மக்கள் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வறட்சியினுடைய கொடுமையால் கால்நடைகள் கூட தண்ணீர் இல்லாமல் அதிகமான அளவில் கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. எனவே அருள்கூர்ந்து அமைச்சர் பெருமகனார் அவர்கள் சம்புவராயர் மாவட்டம் 18 ஒன்றியங்களும் வறட்சியால் வாடிக் கொண்டிருக்கிற

நேரத்தில், என்னுடைய தொகுதியில் 99 பஞ்சாயத்துக்களிலுள்ள குறிப்பாக செ. கூடலூர், தண்டராம்பட்டு, தானிப்பாடி, பறையப்பட்டி, அவ்வப்பட்டு போன்ற சில கிராமங்களில் தண்ணீர் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் லாரிகளின் மூலம் தண்ணீர் வழங்குகின்றபோது நகராட்சிகளுக்கு மட்டும் தண்ணீர் வழங்குகின்ற ஒரு நிலைமை இருக்கிறது. கிராம மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? கிராம மக்களுக்கும் லாரிகளில் தண்ணீர் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்களின் உணர்வை நான் மதிக்கின்றேன். அவரது தொகுதியில் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையைப் பற்றி எடுத்துச் சொன்னார். கவலைப்படுகிறேன். நிச்சயம் அவைகளைப் போக்குகின்ற வகையில் இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதை அவருக்கு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் வறட்சி கோர தாண்டவம் ஆடுகின்றது. இப்படியே நீடித்தால் கிராமத்திலே இருக்கின்ற மக்கள் எல்லாம் கிராமத்தை விட்டு நகரங்களை நோக்கி படையெடுக்கின்ற காலம் வெகு தூரத்தில் இல்லை. அதை மனதில் கொண்டு, எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் விடுக்கின்ற கோரிக்கைகளை முன் வைத்து, அறிக்கை வருவதற்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முன் தொகை ஏதாவது அளிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் வறட்சியில் வாடிக்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச்சொல்லி, அதே நேரத்தில் இந்த நிலை இப்படியே நீடிக்குமானால் என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார். நீடிப்பதற்கு இந்த அரசு அனுமதிக்காது.

*10-10 மணி*

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த குறிப்பின்படி சென்ற ஆண்டு வறட்சி நிவாரணத்தில் என்னென்ன பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள் ஆனால், இன்றைய தினம் திருவண்ணாமலை நகரத்திலேயும். திண்டிவனம் நகரத்திலேயும் மிக அதிகமான அளவிலே குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டு அங்கு நான்கு தினங்களுக்கு ஒரு முறை திருவண்ணாமலையிலேயும், திண்டிவனத்தில் 10 தினங்களுக்கு ஒரு முறையும் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது,

1990 ஏப்ரல் 20] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

அப்படிப்பட்ட நகரங்களுக்கு உதவி வழங்குவதற்காக விசேஷமான முறையிலே ஏதாவது திட்டத்தை அரசு உருவாக்கியிருக்கிறதா? அதேபோன்று செஞ்சி வரையிலே நம்முடைய திருக்கோவில் அருகாமையில் இருக்கிற ஆற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டு போகும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதை விஸ்தரித்து திண்டிவனம் நகரத்திற்கும் நல்ல முறையிலே குடி தண்ணீர் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதே நேரத்தில் ஆரணி தாலுக்காவிலும் கடுமையான வறட்சி நிலவுவதோடு, ஆரணி நகராட்சியில் குடிநீர் சப்ளை 15 நாட்களுக்கு ஒரு முறை கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் லாரிகள் மூலம் தண்ணீர் சப்ளை செய்வதற்கும் ஜெனரேட்டர் வாங்குவதற்கும் நகராட்சிக்குத் தேவையான நிதியை அளிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக் குழந்தைக்குப் பால் வார்க்கின்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபடும். (சிரிப்பு).

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனையில் குடிநீர்ப் பஞ்சத்தால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பொன். விஜயராகவன், ஆ. பாலையா ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பொன். விஜயராகவன்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனை கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.